அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண் :141/2016
தேதி. :10/09/2016

# பாரா ஒலிம்பிக்கில் வென்று சாதனை படைத்துள்ள மாரியப்பன் மற்றும் வருண் சிங் பாட்டிக்கு சமக நிறுவனத் தலைவர் ஆர் சரத்குமார் வாழ்த்துச் செய்தி

*பிரேசிலின் ரியோ டி ஜெனிலாவில் மாற்றுத் திறனாளிகளுக்கான பாரா ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்று வருகின்றது. இதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த சேலம் மாவட்டம் தீவட்டிப்பட்டியை அடுத்த பெரிய வடகம்பட்டி என்ற குக்கிராமத்தில் வசிக்கும் மாரியப்பன் உயரம் தாண்டுதல் போட்டியில் 1.89 மீட்டர் உயரம் தாண்டி தங்கம் வென்று வரலாற்று சாதனை படைத்துள்ளார். மேலும் இந்த பிரிவில் கலந்து கொண்ட மற்றொரு இந்திய போட்டியாளரான வருண் சிங் பாட்டி 1.86 மீட்டர் உயரம் தாண்டி வெண்கலம் வென்று சாதனை படைத்திருப்பது இந்தியாவிற்கே பெருமை சேர்த்துள்ளது.*

*தமது விளையாட்டின் மூலம் இந்தியாவின் பெருமையை உலக நாடுகள் அளவில் தலைநிமிர வைத்திருக்கும் மாரியப்பன் அவர்களுக்கும், வருண் சிங் பாட்டி அவர்களுக்கும் என் சார்பிலும், அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பிலும் நெஞ்சார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.*

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்** B.Sc
**நிறுவனத் தலைவர்**